1. தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பதவிக்கு நியமனம் பெற விண்ணப்பிக்கும் உதவிப் பேராசிரியர் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் உதவிப் பேராசிரியர் மற்றும் அதற்கும் மேற்பட்ட பதவியில் பணிமுடித்திருக்கவேண்டும்.
2. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணிமூப்பு அடிப்படையில் மட்டுமே நியமனம் செய்யப்படவேண்டும் (பணிமூப்பில் தகுதியுள்ள ஒருவர் மீது ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கையோ குற்றச்சாட்டுகளோ நிலுவையில் இருந்தால் பணிமூப்பில் அடுத்த நிலையில் உள்ள விரிவுரையாளரை இயக்குநர் தெரிவு செய்யலாம்)
3. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக நியமனம் செய்யப்படும் உதவிப் பேராசிரியர் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் பணிக்காலம் , அன்னார் ஓய்வு பெறுவதற்கு முன் இருக்க வேண்டும்.
4. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக பணியமர்த்தப்பட்ட ஒருவர் பணியேற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை அப்பணியில் இருக்கலாம்
5. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக பணியாற்றிய ஒருவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்க கூடாது.
6. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரை நியமனம் செய்வதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் நியமன அலுவலர் ஆவார்.

3. மேற்காண் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அரசு தன்னாட்சி பெற்ற கல்லூரிகளில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக நியமனம் செய்வதற்கு மேலே பத்தி 2ல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்(பொ), சென்னை–6
சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர், (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35
சார்ந்த கருவூல அலுவலர்,
உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

வி. சீதாதேவி 3.4.12
பிரிவு அலுவலர்.